1982 மார்ச் 31]

நன்செய் நிலங்களில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண். 680—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புஞ்செய் நிலத்தில் இருந்து ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதோடு நஞ்செய் நிலத்திலும் மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதற்காகவோ அல்லது பிற காரியங்களுக்காகவோ உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் நன்செய் நிலங்கள் அல்லது தோப்பு நிலங்கள் கையகப்படுத்தக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கை. ஆயினும், வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதற்கு நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துவது தவிர்க்க இயலாதது என்று மாவட்ட ஆட்சியர் கருதினால் அரசின் முன் அனுமதி பெற்று நன்செய் நிலங்களை கையகப்படுத்த முன் மொழிவுகள் அனுப்பும்போது அவைகள் ஆய்வு செய்யப்பட்டு ஆணைகள் இடப் படுகின்றன.

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சட்ட நூல்கள்.

*வினா எண் 667—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இதுவரையில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சட்ட நூல்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சிமொழி ஆணையம், 152 மத்தியச் சட்டங்களையும் 46 மாநிலச் சட்டங்களையும், ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றது. இவற்றில், 16 மத்தியச் சட்டங் களும் 4 மாநிலச் சட்டங்களும் அச்சடிக்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10–10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சட்டங்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்படுகிறபோது, அந்த மொழிபெயர்ப் புக் குழு அந்தச் சட்டங்களை அப்படியே வெளியிட்டுவிடுவதாக